DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: Cr.M.P. No. 672/2024 |
| Session | ... | |
| | | Prosecution / PW-1 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு. முத்துராமன் |
| Father's Name (or) Husband Name | : | த/பெ. பெரியசாமி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 12.03.2024

---

**முதல் விசாரணை**

1. நான் தற்போது ஆவுடையார் கோவில் வட்டம், மீமிசல், ஏம்பக்கோட்டையில் வசித்து வருகிறேன். நான் ஸ்ரீ பத்ரகாளியம்மன் டிரேடர்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர் ஆவேன். இறால் பண்ணை நிறுவனத்திற்கு தேவையான தீவனம், மருந்து மற்றும் உபகரணங்கள் ரொக்கம் மற்றும் கடனுக்கு வியாபாரம் செய்து

வருகிறேன். அதனடிப்படையில் இராமேஸ்வரம் வடகாடு பகுதியில் அண்ணாமலையார் அக்வா பார்ம் என்ற பெயரில் இறால் பண்ணை நடத்தி வரும் அதன் பங்குதாரர்களான மாரீஸ்வரன் மற்றும் கமல்அரசன் ஆகிய இருவரும் மேற்படி நிறுவனத்தின் வரவு, செலவு விபரங்களை கவனித்து நடத்தி வருகிறார்கள். மேற்படி 2, 3 எதிரிகளான மாரீஸ்வரன் மற்றும் கமல்அரசன் ஆகிய இருவரும் கடந்த 12.11.2019ம் தேதியில் எனது நிறுவனத்தை அணுகி இறால் பண்ணைக்கு தேவையான தீவனம் மற்றும் மருந்து பொருட்களை கடனாக பெற்று சிறிது நாட்கள் கழித்து பணத்தை செலுத்துவதாக கடன் விண்ணப்பத்தினை எழுதி கொடுத்தார்கள்.

2. கடந்த 01.04.2021ம் தேதி எனக்கு 2,3 எதிரிகள் நிறுவனத்திலிருந்து கொடுக்க வேண்டிய பாக்கி தொகை ரூ. 15,21,277/- தரவேண்டும். மேலும் கடந்த 27.03.2023ம் தேதியில் எனது நிறுவனத்தின் சார்பாக தியாகராஜன் என்பவர் 2, 3 எதிரிகள் இருவரையும் சந்தித்து எனது நிறுவனத்திற்கு பாக்கி நிலுவைத் தொகை நீண்ட காலமாக இருப்பதால் மேற்படி தொகைக்கான வட்டியுடன் சேர்த்து 27.05.2023ம் தேதியன்று 26,16,559/- என்ற தொகைக்கு கரூர் வைஸ்யா வங்கியின் காசோலை எண்.000181 என்ற காசோலையை தியாகராஜன் என்பவருக்கு வழங்கினார்கள்.

3. பின்னர் எதிரிகள் கேட்டுக் கொண்டதிற்கிணங்க 30.06.2023ம் தேதியன்று எங்கள் வங்கியான ஓரியூர் கிளையின் AXIS வங்கியில் மேற்படி காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்துபோது Account closed என்ற குறிப்பாணையுடன் மேற்படி காசோலையும் திருப்பப்பட்டுவிட்டது.

4. பின்னர் நான் 31.07.2023ம் தேதி காசோலையில் கண்ட தொகையை பெற வழக்கறிஞர் மூலம் சட்ட அறிவிப்பு அனுப்பினேன். அந்த சட்ட அறிவிப்பை 1, 3 எதிரிகள் பெற்றுக்கொள்ளப்படாமல் திருப்பப்பட்டுவிட்டது. அதேசமயம் 2வது எதிரி மேற்படி சட்ட அறிவிப்பை பெற்றக்கொண்டு 22.08.2023ம் தேதி பொய்யான விவரம் கண்டு பதில் அறிவிப்பு அனுப்பினார்.

5.	மேற்படி எதிரி என்னிடம் பெற்ற ரூ.26,16,559/- தொகையை மோசடி செய்தது தொடர்பாக மேற்படி தொகையை பெற்றுத்தரும்படி எதிரிகளுக்கு உரிய தண்டனை வழங்கும்படிக்கும் இந்த தனிப்புகாரை தாக்கல் செய்கிறேன்.

(ஓம்/-S.பிரசாத்)
நீதித்துறை நடுவர்,
திருவாடானை.